<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தேசிய நல்லாசிரியர் விருதுகளை, குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று புதுதில்லியில் வழங்கினார்.

2. போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து, ஆசிரியர்கள், மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழகத்தில் திமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு. கே.என். நேருவுக்கு சொந்தமான இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

4. கேரளத்தில் நேரிட்ட சாலை விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த எட்டு மாணவர்கள் உயிரிழந்தனர்.

5. சீன பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 4 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

>>>>>>><<<<<<

தேசிய நல்லாசிரியர் விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

ஆசிரியர் தினத்தை ஒட்டி, இன்று புதுதில்லியில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில், இவ்விருதுகளை அவர் வழங்கினார்.

தமிழகத்தைச் சேர்ந்த இருவர் உட்பட 48 பேர் இந்த விருதுகளை பெற்றுக் கொண்டனர்.

மதுரை பிஎம்-ஸ்ரீ கேந்திரிய வித்யாலயா பள்ளியின் தலைமைஆசிரியை திருமதி. அமுதா இவ்விருதினை பெற்றுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - அமுதா விருது பெறுதல் 8 செகண்ட்ஸ்)

தென்காசி மாவட்டம், புளியம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு. தங்கராஜுக்கு, குடியரசுத்தலைவர் விருதை வழங்கினார்.

(சவுண்ட் பைட் தங்கராஜ் விருது பெறுதல் 8 செகண்ட்ஸ்)

*இந்த விருது பெற்றது மிகவும் மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று திரு. தங்கராஜ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் - தங்கராஜ் 41 செகண்ட்ஸ்)*

*இதேபோல் மற்றொரு விருதாளர் திருமதி. அமுதா, ஆசிரியர் பணியை சிறப்பாக மேற்கொள்ள உறுதுணையாக இருந்த அனைவருக்கும் இந்த தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்வதாக எமது செய்தியாளரிடம் கூறினார்.*

*(சவுண்ட் பைட் - அமுதா 47 செகண்ட்ஸ்)*

*ஆசிரியர் தினத்தை ஒட்டி, குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர்கள், தமிழக முதலமைச்சர் மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*>>>>>>><<<<<<*

*போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து, ஆசிரியர்கள், மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.*

*புதுதில்லியில் தேசிய நல்லாசிரியர் விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடன் உரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.*

*கைபேசி பயன்பாட்டை மாணவர்கள் குறைப்பதற்கும் ஆசிரியர்கள் உதவிட வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.*

*>>>>>>><<<<<<*

*ராஜாளி கழுகுகளை பாதுகாப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.*

*சர்வதேச ராஜாளி கழுகுகள் தினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள சமூகவலைதளப்பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் இந்த வகை கழுகுகள் முக்கியப் பங்கு வகிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.*

*இவற்றை பாதுகாக்க மக்களும் இந்நாளில் உறுதியேற்க வேண்டும் என்றும் திரு. புபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.*

*>>>>>>><<<<<<*

நாட்டுக்காக தம் வாழ்நாளையே அர்ப்பணித்த தியாகி கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் என்று தமிழக அமைச்சர் திரு. சம்பத்குமார் கூறியுள்ளார்.

வ.உ. சிதம்பரனாரின் பிறந்த தினத்தை ஒட்டி, கோவையில் உள்ள அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட - சம்பத்குமார் 40 செக்ணட்ஸ்)*

*>>>>>>><<<<<<*

தமிழகத்தில் திமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு. கே.என். நேருவின் இல்லத்தில் லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் இன்று சோதனை மேற்கொண்டனர்.

திரு. கே.என். நேருவுக்கு சொந்தமான இடங்களிலும் இந்த சோதனை நடைபெற்று வருகிறது.

அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை இது என்று திரு. கே.என். நேரு கருத்து தெரிவித்துள்ளார்.

திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலினும், அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை இது என்று சமூகவலைதளத்தில் கூறியுள்ளார்.

இதற்கெல்லாம் திமுக அஞ்சாது என்றும், சட்டரீதியாக அனைத்தும் எதிர்கொள்ளப்படும் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

*>>>>>>><<<<<<*

கேரளத்தில் நேரிட்ட சாலை விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த எட்டு மாணவர்கள் உயிரிழந்தனர்.

இந்த மாணவர்கள் சென்று கொண்டிருந்த கார் திருச்சூர் அருகே, நின்று கொண்டிருந்த லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் திண்டுக்கல்லைச் சேர்ந்த பொறியியல் மாணவர்கள் என்றும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

*>>>>>>><<<<<<*

மத்தியப்பிரதேசத்தில் சுங்கச்சாவடிகளில் தடையின்றி வாகனங்கள் செல்லும் வசதி முதன்முறையாக *Phanda* சுங்கச்சாவடியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

*Bhopal - Dewas* வழித்தடத்தில் உள்ள இந்த சுங்கச்சாவடியில், மணிக்கு 100 கிலோமீட்டர் வேகத்தில் வாகனங்கள் கடக்க இயலும் என்று அம்மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராகேஷ் சிங் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர். முன்னோடித் திட்டமாக இந்த வசதி, தற்போது தொடங்கப்பட்டுள்ளதாகவும், இதன் வெற்றியை பொறுத்து பிற சுங்கச்சாவடிகளுக்கு விரிவுபடுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

தொழில்நுட்ப கோளாறு காரணமாக கட்டணம் வசூலிக்கப்படவில்லையென்றால் சம்பந்தப்பட்ட வாகனங்களுக்கு மின்னணு ரசீது வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் 3 நாட்களுக்குள் சுங்க கட்டணத்தை செலுத்தவேண்டும் என்றும் இல்லையென்றால் அபராதம் விதிக்கப்படும் என்றும் திரு. ராகேஷ் சிங் கூறினார்.

>>>>>>><<<<<<

அஸ்ஸாம் அரசு பள்ளிகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் அம்மாநில அரசு கையெழுத்திட்டுள்ளது.

இதுதொடர்பாக 6 நிறுவனங்களுடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளதாக அம்மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. Ranoj Pegu கூறியுள்ளார்.

பள்ளிக் கல்வி கட்டமைப்பை வலுப்படுத்த இது உதவிடும் என்றும் சமூகவலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

திரிபுராவில் சரணடைந்த தீவிரவாதிகள், 11 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்கொண்டு வரும் போராட்டம் இரண்டாவது நாளாக இன்றும் நீடிக்கிறது.

இதன் காரணமாக, பல்வேறு பகுதிகளில் சாலை மற்றும் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>>><<<<<<

நேபாள வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட இந்தியர்களில் இதுவரை 169 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

Trishuli, Bazaar பகுதியிலிருந்து 5 வயது குழந்தை உட்பட 3 இந்தியர்கள் மீட்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

275 இந்தியர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா இதுவரை 95 டன் நிவாரணப் பொருட்களை நேபாளத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

*காங்கோவில் எபோலா பாதிப்பால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்து 72ஆக அதிகரித்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.*

*ஆறாயிரத்திற்கும் மேற்பட்டோர் எபோலாவால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருவதாகவும் அதன் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

*எபோலாவை கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்க நிதியுதவி கோருவது உட்பட 6 மாத கால திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>>>>>>><<<<<<*

*சீன பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா 3 தங்கம், 4 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் Nitesh Kumar, Naveen Sivakumar ஆகியோரும், இரட்டையர் பிரிவில் Hardik Makkar - Chirag Baretha இணையும் தங்கப்பதக்கம் வென்றனர்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவில் சுமதி சிவனும், ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் Shashank Kumar மற்றும் Chirag Baretha-வும், ஆடவர் இரட்டையர் பிரிவில் நவீன் சிவக்குமார் - சூர்யகாந்த் யாதவ் இணையும்*

*வெள்ளிப்பதக்கம் வென்றன.*

*>>>>>>><<<<<<*

*உலக கோப்பை Pickle Ball சாம்பியன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*வியட்நாமில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா இதுவரை 6 தங்கம் உட்பட 37 பதக்கங்களை வென்றுள்ளது.*

*>>>>>>><<<<<<*

*ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு முதல் ஆட்டங்களில் வெற்றி பெற்றது.*

*சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா 14-0 என்ற கோல்கணக்கில் இந்தோனேஷியாவை வென்றது.*

*மகளிர் பிரிவில், இந்தியா 4-1 என்ற கோல்கணக்கில் தென்கொரியாவை வென்றது.*

*>>>>>end<<<<<<*